

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜனவரி 03, 2019 | புரட்சி 17 | முழக்கம் 51 | விலை: ரூ.3.00

## பரப்புரை இயக்கங்கள்; போராட்டங்கள்; மாநாடுகள்

# 2018: கழகத்தின் தொடர் களப்பணிகள்

***2018இல் திராவிடர் விடுதலைக் கழகத்தில் செயலாற்றல் கொண்ட தோழர்கள் தொடர்ச்சியான களப்பணிகளை செய்து முடித்துள்ளனர். வழமையான பொதுக் கூட்டங்கள், பெரியார் அம்பேத்கர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் ஆகிய வற்றைத் தவிர்த்து மாநாடு, பரப்புரை, போராட்டம் மற்றும் பயிலரங்க நிகழ்வு களை மட்டும் கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் இடம் பெற்றுள்ள பதிவுகளிலிருந்து தொகுத்துள்ளோம்.***

***ஜனவரி:*** கல்வி - வேலை வாய்ப்பில் - தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் உரிமைகள் பறிக்கப்படுவதை விளக்கும் துண்டறிக்கைகளை பல்லாயிரக்கணக்கில் தயாரித்து கழக முன்னணி அமைப்பினர் - தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் கல்லூரி, பள்ளி வாயில்களில் மாணவ மாணவிகளிடம் தோழர்கள் வழங்கினர்.

பா.ஜ.க. பார்ப்பனர் எச். ராஜா நடத்திய ஒரு சமஸ்கிருத நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்ற காஞ்சிபுரம் சங்கராச்சாரி விஜயேந்திரன் 'தமிழ்த் தாய்' வாழ்த்துப் பாடலுக்கு எழுந்து நிற்க மறுத்ததைக் கண்டித்து சேலம், மேட்டூர், பள்ளிப் பாளையம், ஈரோடு, மார்த்தாண்டம், மதுரை உள்ளிட்ட நகரங்களில் கழகத் தோழர்கள் போராட்டங்களை நடத்தினர். காஞ்சிபுரம் சங்கரமடம் முற்றுகைப் போராட்டத்தில் சென்னை மற்றும் காஞ்சி மாவட்டக் கழகத் தோழர்கள் பங்கேற்று கைதானார்கள். திருப்பூர்-புத்தகத் திருவிழாவில் 'நிமிர்வோம்' இதழுக்காக தனிக் கடை ஒன்றை திருப்பூர் கழகத் தோழர்கள் எடுத்து, கழக ஏடுகளை - நூல்களை மக்களிடம் கொண்டு சென்றனர்.

***பிப்ரவரி:*** சேலம் பெரியார் பல்கலைக்கழக வளாகத்துக்குள் பா.ஜ.க.வின் 'மதவாத ரத யாத்திரை' அனுமதிக்கப்பட்டதை எதிர்த்து பல்கலைக்கழக வளாகம் அருகே கறுப்புக் கொடி காட்டி கழகத் தோழர்கள் கைதானார்கள்.

தமிழகத்திலிருந்து உயர் மருத்துவப் பட்டப் படிப்பு படிக்கச் செல்லும் மாணவர்கள் மர்மமான முறையில் மரணிப்பது குறித்து நீதி விசாரணை நடத்தக் கோரி ஆளுநர் மாளிகையை முற்றுகையிடச் சென்ற தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

***மார்ச்:*** கோவையில் மதவெறிக்கு பலியான கழகத் தோழர் பாரூக் நினைவு நாளில் குருதிக் கொடை முகாமும் மதவெறிக்கு எதிரான கருத்தரங்கமும் கோவையில் கழகம் நடத்தியது.

திருப்பூரில் மகளிர் தினத்தையொட்டி மாவட்டக் கழக சார்பில் மகளிர் மாநாடும் பேரணியும் எழுச்சியுடன் நடந்தது.

திரிபுராவில் லெனின் சிலையை பா.ஜ.க. மதவெறியர்கள் தகர்த்ததுபோல் தமிழ்நாட்டிலும் பெரியார் சிலையைத் தகர்க்க வேண்டும் என்று முகநூலில் பதிவிட்ட பார்ப்பனர் எச். ராஜாவை எதிர்த்து கழகம் கொதித்தெழுந்தது. கன்னியாகுமரி, ஆனைமலை, சென்னை, மயிலாடுதுறை, நாமக்கல், பேராவூரணி, சேலம், சங்கராபுரம், விழுப்புரம் உள்ளிட்ட நகரங்களில் எச்.ராஜாவின் உருவப் பொம்மையை எரித்து கழக சார்பில் பேராட்டங்கள் நடத்தப்பட்டன. குடியாத்தம், புதுக்கோட்டையில் பெரியார் சிலைகள் சேதப்படுத்தியதைத் தொடர்ந்து, மயிலாப்பூரில் பார்ப்பனர்கள் பூணூலை அறுத்து சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் காவல்துறையில் சரணடைந்தனர். நங்கவள்ளி கழகத் தோழர்கள் கிருஷ்ணன், மனோஜ் குமார், ராசேந்திரன் , கோபி சங்கரமடத்தில் தாக்குதல் நடத்தியதாகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மயிலாடுதுறையில் கழகத் தோழர்கள் இராம ரதத்தை எதிர்த்து 'இராமன்' படத்தை செருப்பால் அடித்து கைது செய்யப்பட்டனர். திருப்பூர், தூத்துக்குடியில் எச். ராஜாவைக் கண்டித்து கழகம் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை, எச். ராஜாவின் கருத்து - தமிழக பா.ஜ.க.வின் கருத்து அல்ல என்று கூறினார். கடைசியில் தனக்குத் தெரியாமலேயே தனது முகநூலை நிர்வகிப்பவரால் அப்படி பதிவிடப்பட்டது என்று எச்.ராஜா பின் வாங்கினார்.

வடமாநிலத்திலிருந்து அயோத்தியில் இராமன் கோயிலைக் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையுடன் இராமன் ரதயாத்திரை, தமிழகத்துக்குள் செங்கோட்டை வழியாக நுழைய விருக்கும் சேதி அறிந்து 'காவி பயங்கரவாத எதிர்ப்புக் கூட்டமைப்பு' ஒன்று உருவாக்கப்பட்டு கழகமும் அதில் இடம் பெற்றது. செங்கோட்டையில் கூட்டமைப்பைச் சார்ந்த தோழர்களுடன் கழகத் தோழர்களும் ரதயாத்திரையை மறிக்கச் சென்றபோது கைதானார்கள்.

மத்திய - மாநில அரசுப் பதவிகளை தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களுக்கே வழங்கக் கோரி சென்னையில் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் கண்டன முழக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பறிபோகும் தமிழக உரிமைகளை வலியுறுத்தி தர்மபுரி மாவட்டத்தில் பரப்புரை இயக்கம் நடத்தப்பட்டது.

***ஏப்ரல் :*** காவிரிப் பிரச்சினையில் நடுவண் அரசு, தமிழகத்துக்கு துரோகம் இழைப்பதை எதிர்த்து தமிழகம் முழுதும் பல்வேறு அமைப்புகள், கட்சிகள் போராட்டங்களை நடத்தின. சென்னையில் வருமான வரித் துறை அலுவலகத்தை இழுத்து மூடும் போராட்டத்தை நடத்தி கழகத் தோழர்கள் கைதானார்கள். சென்னையில் நடக்கத் திட்டமிட்ட அய்.பி.எல். கிரிக்கெட் போட்டியை நிறுத்தக் கோரி நடந்த போராட்டத்தில் கழகத் தோழர்கள் பங்கேற்றனர். சென்னை மந்தைவெளி தொடர்வண்டி நிலையத்தை தோழர்கள் முற்றுகையிட்டனர். விழுப்புரம் மாவட்ட கழகத் தோழர்கள் அஞ்சலகத்தை முற்றுகையிட்டனர். கோவையில் வருமான வரித்துறை அலுவலகம் முற்றுகையிடப்பட்டது. நாமக்கல்லில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. மதுரை, பொள்ளாச்சி, திருப்பூரில் இரயில் மறியல் செய்து தோழர்கள் கைதானார்கள். நங்கவள்ளியில் தோழர்கள் 'தினமலர்' பார்ப்பன நாளேட்டுக்கு தீ வைத்தனர்.

காவிரியில் நடுவண் அரசின் துரோகத்தைக் கண்டித்து தமிழர் வாழ்வுரிமைக் கட்சி நடத்திய நெய்வேலி அனல் மின் நிலையம் முற்றுகைப் போராட்டத்தில் தோழர்கள் பங்கேற்று கைதானார்கள்.

கோபி மற்றும் சென்னையில் கழக சார்பில் மகளிர் மாநாடுகள் எழுச்சியுடன் நடந்தன.

சென்னையில் தமிழர் தன்னுரிமை-தன்மான மீட்பு மாநாடு, 'நிலம் பாழ்; நீர் மறுப்பு; நீட் திணிப்பு' என்ற தலைப்பில் சென்னை மண்டல மாநாடாக எழுச்சியுடன் நடந்தது.

காஷ்மீரில் இஸ்லாமிய பழங்குடி சமூகத்தைச் சார்ந்த 'ஆசிஃபா' என்ற சிறுமியை மதவெறியர்கள் பாலுறவு சித்திர வதைக்கு உள்ளாக்கி படுகொலை செய்ததைக் கண்டித்து, சென்னை, மயிலாடுதுறை, பள்ளிப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் கழகம் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

***மே :*** கல்வி - வேலை வாய்ப்புகளில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் உரிமை கோரி தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் திருப்பூர், ஈரோடு, பொள்ளாச்சி, சென்னையில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

'பெரியார் கைத்தடி - அம்பேத்கர் கண்ணாடி ஊர்திப் பேரணி' மே 9ஆம் தேதி ஈரோட்டில் தொடங்கி, ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் - பரப்புரை இயக்கத்தை கழகம் நடத்தியது. மே 12இல் கூடுவாஞ்சேரியில் பயண நிறைவு விழா மாநாடு சிறப்புடன் நடந்தது.

பெண் ஊடகவியலாளர்களை ஒழுக்கக் கேடானவர்கள் என்று முகநூலில் பதிவிட்ட பா.ஜ.க. பார்ப்பன நடிகர் எஸ்.வி. சேகருக்கு எதிராக அவரைக் கைது செய்யக் கோரி சென்னை மாநகர ஆணையகத்தை முற்றுகையிடச் சென்ற சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

தூத்துக்குடி 'ஸ்டெர்லைட்' ஆலைக்கு எதிராகப் போராடிய மக்கள் மீது காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 13 பேர் உயிரிழந்ததைக் கண்டித்து, சென்னை, பள்ளிப்பாளையம், பேராவூரணி, மார்த்தாண்டம் உள்ளிட்ட ஊர்களில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

விழுப்புரம் மாவட்டம் கடுவனூரில் குழந்தைகளுக்கான பழகுமுகாம் நடத்தப்பட்டது.

***ஜூன் :*** ஏற்காட்டில் கழக சார்பில் 2 நாள் பயிற்சி முகாம் நடந்தது. சிவகங்கை மாவட்டம் கச்சநத்தம் கிராமத்தில் தலித் மக்கள் மீது கொலை வன்முறைத் தாக்குதல் நடந்தது. கோபி மற்றும் நாமக்கல் மாவட்டக் கழகத் தோழர்கள் கச்சநத்தம் கிராமத்துக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறினர்.

***ஜூலை :*** வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்த உச்சநீதி மன்றத் தீர்ப்பைக் கண்டித்து கூட்டமைப்பு சார்பில் நடந்த இரயில் மறியல் போராட்டங்களில் திராவிடர் விடுதலைக் கழகம் பங்கேற்றது.

(4 ஆம் பக்கம்)

# திருச்சிப் பேரணி : மூத்த கருஞ்சட்டைத் தோழரின் உணர்வு

23.12.2018 அன்று திருச்சியில் நடைபெற்ற பெரியார் கருஞ்சட்டைப் பேரணி மாநாடு குறித்து பொது மக்கள் மற்றும் பெரியார் உணர்வாளர்கள், பெரியார் இயக்கத்தினிடையே மிகுந்த பேரெழுச்சியும், மகிழ்ச்சியும் ஒரு புதிய செயல் வேகமும் ஏற்பட்டிருக்கிறது.

உணர்வாளர்களிடம் பேசிய போது பெரியார் பெருந்தொண்டர், திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் பகுதியில் வணிகம் நடத்தி வரும் கம்பரசம் பேட்டையைச் சேர்ந்த பெரியவர் இருளாண்டி கூறிய கருத்து:

“நான் சிறுவயதிலிருந்தே பெரியார் கொள்கைகளைப் பின்பற்று பவனாகவே இருந்தேன். எனது 18ஆவது வயதில் 1957இல் பெரியார் கூட்டிய தஞ்சை மாநாட்டிற்குப் பிறகு இப்பொழுதுதான் இவ்வளவு பெரும் கருஞ்சட்டைத் தோழர்களைப் பார்க்க முடிந்தது. உணர்ச்சி பெருக்கில் ஆனந்தக் கண்ணீர் வடித்தேன்.

எங்களுக்குப் பிறகு இந்த பெரியார் இயக்கத்தை வழி நடத்த, மக்களிடையே கொண்டு செல்ல யார் இருக்கிறார்கள் என்று நினைத்த வேளையில் பல ஆயிரக்கணக்கில் குறிப்பாக இளைஞர்களும் இளம் பெண்களும் பேரணியில் ஆட்டம் பாட்டம் முழக்கத்துடன் வந்தது மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. என்னைப் போன்ற வயதானவர்கள் ஒரு சிலரை மட்டுமே காண முடிந்தது.

பெரியார் பெயரில் இயக்கம் நடத்தி வந்த பல தலைவர்களும், பெரியாரை ஏற்றுக் கொண்ட இயக்கங்களின் தலைவர்களும் ஒரே மேடையில் ஒரே குரலாகப் பேசியதும், இனி தமிழ்நாட்டுக்கான ஒரே தலைவர் பெரியார் தான் என்று பேசியதும் என் வாழ்வின் மறக்க முடியாத நிகழ்வாகும். நான் மிகுந்த மகிழ்ச்சியில் இருக்கிறேன்” என்று கூறினார்.

திருச்சியில் வழக்குரைஞராக உள்ள கங்கைச் செல்வன், ம.தி.மு.க. விலிருந்து, அ.இ.அ.தி.மு.க. சென்ற போதும் தொடர்ந்து பெரியார் கொள்கை பற்றாளராகவே உள்ளார். அவர் பேரணி பற்றி தனது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார்.

“மிகச் சிறப்பான ஏற்பாடுகளை சரியான நேரத்தில் பெரியார் இயக்கங்களும், பெரியார் உணர்வாளர்களும் ஒன்று சேர்ந்து இனி இந்த மண்ணில் பெரியாரை விட்டால் தமிழ்நாட்டிற்கு (எங்களுக்கு) வேறு தலைவர் இல்லை என்பதை மிக அழுத்தமாக இந்த மாநாட்டின் மூலம் சொல்லியிருக்கிறீர்கள். தமிழ்நாடு எங்கள் நாடு, இங்கு ஏதடா இந்து நாடு போன்ற முழக்கங்கள் காவிகளை உண்மையிலேயே கதற வைத்து விட்டது” என்று கூறியதோடு, தனது முகநூல் பக்கங்களில் தொடர்ந்து இது குறித்து பதிவிட்டு வருவதையும் எடுத்துக் காட்டினார்.

**- திருச்சியிலிருந்து மு. மனோகரன்**
**(கழக மாவட்டச் செயலாளர்)**

### திருத்தம்

கடந்த வாரம் முதல் பக்கத்தில் வெளி வந்த சுப. வீரபாண்டியன் உரையில், தூத்துக்குடி மாநாட்டுப் பந்தல் எரிக்கப் பட்டது என்று தவறாக வெளி வந்து விட்டது. மதுரை மாநாட்டுப் பந்தல் எரிக்கப்பட்டது என்பதே சரி. தவறுக்கு வருந்துகிறோம். (ஆர்)

# சீனாவுக்கொரு சன் யாட் சென், தமிழ்நாட்டிற்கொரு பெரியார்

திருச்சியில் நடந்த திசம்பர் 23 தமிழின உரிமை மாநாட்டில் பேசுவதாய் இருந்த உரை... பெரியார் பற்றாளர்களோடு நாமும் பகிர்ந்து கொள்ள சில செய்திகள் உண்டு.

சுயராஜ்ஜியம், சுதந்திரம் என்ற ஆரவாரங்களுக்கு இடையே 1947 ஆம் ஆண்டே ஆகஸ்ட் 15 தமிழர்களுக்கு துக்க நாள் என்று சொன்ன தேசத் துரோகி இந்திய தேசத் துரோகி, இந்து, இந்தியன் என்ற அடையாளத்தை என்றைக்கும் ஏற்காத (all time anti-indian), சாதியைப் பாதுகாக்கும் அரசமைப்பை கொளுத்துங்கள் என்று சொன்ன (urban naxal), 1947இலேயே படேலின் பாசிச ஆட்சி என்று சொன்ன பெரியாருக்கு வீரவணக்கம். பெரியார் பற்றாளர்களுக்கு வணக்கம்.

தமிழ்நாடு காங்கிரசு கமிட்டியின் தலைவராக இருந்த போது பார்ப்பனிய மேலாதிக்கத்தையும் இந்திய தேசியத்தையும் ஏற்காத பெரியார் காங்கிரசிலில் இருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்டார். தனக்கென தனித்த வரலாறு கொண்ட தமிழ்நாட்டின் தனித்த வரலாற்றுப் பாதையை கடந்த நூற்றாண்டில் உறுதிசெய்த வரலாற்று நிகழ்வு இது. இதனால்தான், இந்துராஷ்டிர கனவு கொண்டோருக்கு பகை உணர்வு பெரியார் மீது ஏற்படுகிறது. அதனால்தான், அவர்கள் பெரியார் சிலையை உடைப்போம் என்கிறார்கள்.

பல தேசம் என்றில்லாமல் ஒரே தேசம்-இந்து தேசம் படைக்க விரும்பும் காவிகளின் கனவும் பெருமூலதனத்தின் பேய்ப் பசிக்கு ஒரே தேசம், ஒரே சந்தை வேண்டும் என்ற கார்ப்பரேட்களின் கனவும் இணையும் புள்ளியில் காவி-கார்ப்பரேட் கூட்டணி ஏற்பட்டுள்ளது. அதன் சர்வாதிகார ஆட்சி நடந்து வருகிறது. அதுதான் பெரியார் பற்றாளர்களை ஓரணியில் திரட்டியுள்ளது.

“பிரிட்டிஷ்காரன் கையில் இருந்த அதிகாரம் வட நாட்டான், பார்ப்பன, பனியாக்களிடம் போகிறதே” என்று பதைபதைத்த நெஞ்சோடு ஓடி தேய்ந்த பெருங்கிழவன் ஒரே ஒரு குரலாய், தனித்த குரலாய் ஆகஸ்ட் 15ஐ துக்க நாளென சொல்லத் துணிந்தார். டாடாவும், பிர்லாவும் பஜாஜூம் மட்டுமல்ல இன்றோ அம்பானியும், அதானியும், அகர்வாலும் என கொள்ளையர் தம் எண்ணிக்கை கூடிவிட்டது. பன்னாட்டுக் குழுமமாய் வளர்ச்சிக் கண்டு நிற்கிறது. அவர் காலத்தே பிரிட்டிஷ்காரன். இன்றோ உலகெங்கும் உள்ள கொள்ளையர் எல்லாம் கூட்டுவைத்துக் கொண்டு பெரியார் நாட்டை வேட்டைகாடாக்கி உள்ளனர். ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே தேர்வு, ஒரே சந்தை என அரைத்துப் பொடியாக்கி கரைத்துவிடப் பார்க்கின்றனர். சுயமரியாதை இயக்கத்தின் நூறாண்டு உழைப்பை, உழைப்பின் பலனை ஐந்தாண்டில் குலைத்துவிடத் துடிக்கின்றனர்.

இன்னொரு ஐந்தாண்டுகள் இந்த வட்டமிடும் வல்லூறுகளின் ஆட்சி தொடர்ந்தால் காய், கனி, இலை, தழை என்றில்லாமல் மரத்தையே வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்த்துவிடும். இந்த உடனடி அபாயத்தைத் தடுத்தாக வேண்டும். அதை தடுத்தால் மட்டும் போதாது. வல்லூறுகளுக்கு முடிவு கட்டியாக வேண்டும். இந்த இடத்தில் தான் எதிரிகளை மட்டுமின்றி துரோகிகளையும் விட்டுவைக்காத பெரியாரின் உறுதி நமக்கு தேவைப்படுகின்றது.

பார்ப்பனர்களை மட்டுமின்றி முக்கால் பார்ப்பனர்களையும் அவர் எதிர்த்தார். இன்றோ பனியாக்கள் மட்டுமின்றி தமிழ்நாட்டிலேயே பல அரைப் பனியா, முக்கால் பனியா, ஒன்றரை பனியாவாக மாறிப் போயுள்ள கார்ப்பரேட் துரோகிகளை எதிர்க்கும் துணிவை பெரியாரிடம் இருந்து கடன் வாங்கிக் கொள்வோம்.

சாதி ஒழிப்பையும் சுதந்திர தமிழ்நாட்டையும் உயிரினும் இனிய கொள்கைகளாக ஏற்றுப் பெரியார் பாடுபட்டார். ஆட்கள் மாறினாலும், ஆட்சிகள் மாறினாலும் பெரியார் இக்கொள்கைகளில் இருந்து பின்வாங்க வில்லை. இது போலவே சீனத்தின் தந்தை சன் யாட் சென் சீனத்திற்கென்று மூன்று பெரும் கோட்பாடுகளை வகுத்து தந்தார். பிற்காலத்தில் வந்த சீனப் புரட்சியாளர் மாவோ சன் யாட் சென் காலத்துக்குப் பொருத்தமாய் சன் யாட் சென்னின் கோட்பாடுகளை வார்த்தும் வளர்த்தும் நிறைவேற்றினார். அப்போது எதிரிகளிடம் இருந்து மட்டுமின்றி சன்யாட் சென்னின் பெயராலேயே சன் யாட் சென்னின் கொள்கைகளை குழி தோண்டிப் புதைத்துக் கொண்டிருந்த துரோகிகளிடமிருந்து சீனத்தைக் காத்து, சன் யாட் சென்னின் பெருங்கனவாம் புதிய சீனத்தைப் படைத்தார். நாமும் இப்போது தமிழ்நாடின் தந்தை பெரியாரின் பெருங்கனவை நிறைவேற்ற வேண்டிய கடமையை தோளில் சுமந்து நிற்கின்றோம். காலத்துக்கும் சூழலுக்கும் பொருத்தமாய் அவர் கொள்கைகளை வளர்த்து எடுத்து அதை நிறைவேற்றும் புதிய அரசியல் படையாய் எழுந்து நிற்போம்.

**- ‘இளம் தமிழகம்’ சார்பில் செந்தில்**
**முகநூல் பதிவு**

# ஆய்வரங்கமாக நடந்த ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டம்




‘நிமிர்வோம்’ மூன்றாம் ஆண்டு தொடக்க விழா மற்றும் எட்டாவது வாசகர் வட்டம் டிச. 16, 2018 அன்று சென்னை திருவான்மியூர் பனுவல் புத்தக அரங்கில் ஆய்வரங்கம்போல் நடந்தது.

தலைமைக் குழு உறுப்பினர் அன்பு. தனசேகர் தொடக்க உரையாற்றினார். (மாதந்தோறும் ‘நிமிர்வோம்’ வளர்ச்சிக்கு ரூ.1000 நன்கொடையும் வழங்கி வருகிறார்) வளர்மதி எழுதிய ‘சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்’ நூல் குறித்து இமானுவேல் துரை விரிவாக உரை நிகழ்த்தினார். குஞ்சிதம் குருசாமி, நீலாவதி இராம சுப்ரமணியம், சிவகாமி சிதம்பரனார் உரையிலிருந்து மேற்கோள்களை எடுத்துக் காட்டினார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எழுதிய ‘அமைப்பாய் திரள்வோம்’ நூல் குறித்து எட்வின் பிரபாகரன் நூலின் மய்யமான கருத்துகளை மிகச் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

‘நிமிர்வோம்’ இதழில் இடம் பெற்றிருந்த மனுஷ்யபுத்திரன் உரையை மய்யமாக வைத்து பெரியாரின் ‘கிராம சீர்திருத்தம்’ நூலோடு ஒப்பிட்டு மதன்குமார் திறனாய்வு செய்தார். யுவராஜ் – க. திருநாவுக்கரசு எழுதிய நீதிக் கட்சி வரலாறு நூலைத் திறனாய்வு செய்து, நீதிக்கட்சி தொடங்கப்பட்ட காலத்திலிருந்து அதன் அரசியல் பயணங்கள் வழியாக பார்ப்பன ரல்லாத மக்களுக்கு நிறைவேற்றிய திட்டங்களைப் பட்டியலிட்டார்.

கார்த்தி இராசேந்திரன் ‘பீமா கோரிகான்’ வரலாற்றின் பின்புலத்தை விரிவாக வரலாற்றுப் பக்கங்களிலிருந்து எடுத்துக்காட்டிப் பேசினார். சிவாஜி மன்னரில் தொடங்கி அவரது பரம்பரை ஆட்சி இறுதியில் பார்ப்பனிய ஆட்சியாக முடிவுற்ற வரலாற்றையும் பேஷ்வா பார்ப்பனர்கள் நடத்திய பார்ப்பனிய கொடூர ஆட்சியையும் விரிவாகப் பேசியதோடு ‘ஜெய்பீம்’ முழக்கம், ‘அம்பேத்கர் வாழ்க’ என்ற நோக்கத்தில் உருவானது அல்ல என்பதையும், அம்பேத்கரே ‘பீமகோரிகான்’ நினைவிடத்தில் ஜெய்பீம் முழங்கியதையும் எடுத்துக் காட்டினார். ஏ. பிரகாசு, தனியார் துறையில் ஒடுக்கப்பட்ட மக்கள் புறக்கணிப்பை ஏராளமான தரவுகளோடு விளக்கினார்.

நிறைவாக விடுதலை இராசேந்திரன், தோழர்களின் கருத்துகளை முன் வைத்துப் பேசினார். தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி நிகழ்வை ஒருங்கிணைத்தார். திருவான்மியூர் பகுதி திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வுக்கு நா. விவேக் தலைமை தாங்கினார். மா. தேன்ராஜ் வரவேற்புரை நிகழ்த்த தமிழ்தாசன், லெனின் ராசா முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் பங்கேற்ற இடதுசாரி அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள், “மிகச் சிறந்த ஆய்வரங்கமாக நடந்தது. பல்கலைக்கழக ஆய்வரங்கில்கூட இத்தகைய ஆழமான கருத்துகளைக் கேட்க முடியாது” என்று வியந்து பாராட்டினர்.

**- நமது செய்தியாளர்**

# மீனாட்சி அம்மன் கோவிலின் ஒரு நாள் வருவாய் 50 ரூபாயா?

***“நான் ஏன் நரேந்திர மோதியை ஆதரிக்கிறேன்?” புத்தகத்தை எழுதிய மாரிதாஸ், சமீபத்தில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை குறித்து ஒரு வீடியோ பதிவை வெளியிட்டிருக்கிறார். வழக்கம்போல ஒரு போர்டில் கசமுசாவென ஏகப்பட்ட வார்த்தைகளை எழுதிவைத்துக்கொண்டு, மாரிதாஸ் உளறும் அந்த வீடியோ ஒரு பொய்களின் குவியல். எட்டு நிமிடங்களுக்கு ஓடும் அந்த வீடியோவில் அவர் எப்படி தகவல்களைத் திரித்துச் சொல்கிறார் என்பதைப் பார்ப்போம்.***

1. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் உள்ள கோவில்களின் எண்ணிக்கை 36, 488.

   **பதில்:** தவறு. 2018-19ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பின்படி, தமிழக இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் உள்ள கோவில்களின் எண்ணிக்கை 38,646. அந்த நபர் சொல்வதுபோல 36 ஆயிரத்துச் சொச்சமல்ல. ஒரு சிறிய தகவலைக்கூட சரிபார்க்க முடியாமல், இவ்வளவு பெரிய பேச்சு.

2. தமிழகக் கோவில்களிலிருந்து கிடைக்கும் வருவாயின் அளவு வருடத்திற்கு ஏறக்குறைய 55 கோடி ரூபாய்.

   **பதில்:** பொய். தமிழக கோவில்களில் இருந்து கிடைக்கும் வருவாய், ஆயிரக்கணக்கான கோடிகள். இந்த நபர் சொல்வதைப்போல 55 கோடிகள் அல்ல. இந்தத் தகவலை அவர் எங்கேயிருந்து எடுத்தார் என்ற ஆதாரத்தைத் தரவேண்டும்.

3. மீனாட்சி அம்மன் கோவிலின் ஒரு நாள் வருவாய் செலவு போக 50 ரூபாய்.

   **பதில்:** இருப்பதிலேயே மிகக் கேவலமான பொய் இதுதான். தமிழ்நாட்டின் மிகப் பெரிய வருவாய் கிடைக்கும் கோவில்களில் ஒன்று மதுரை மீனாட்சி அம்மன் கோவில். இந்தக் கோவிலின் ஆண்டு வருவாய் சுமார் 49 கோடி ரூபாய். உண்டியலில் இருந்து மட்டும் ஒரு மாதத்திற்கு 80 லட்ச ரூபாய் கிடைக்கிறது. இந்தத் கோவிலில் சுமார் 400 ஊழியர்கள் - அர்ச்சகர்கள் - உட்பட பணியாற்றுகிறார்கள். இவர்களுக்கான சம்பளமாக மாதத்திற்கு 8.75 லட்ச ரூபாய் கோவில் வருவாயிலிருந்து கொடுக்கப்படுகிறது.

   இந்த 49 கோடி ரூபாயில், ஊழியர்கள் சம்பளம் போக, மின்சார கட்டணம் மட்டும் 1.5 கோடி ரூபாய் செலுத்தப்படுகிறது. பராமரிப்புச் செலவு, வழக்கறிஞர் கட்டணம், பிற செலவுகளுக்கு 11 கோடி ரூபாய் செலவாகிறது.

   இது தவிர, கோவிலின் சார்பில் யானைகள், ஒட்டகங்கள் வளர்ப்பது போன்றவையும் இருக்கின்றன. மேலும் 2 ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றன.

   இவ்வளவும் செலவழித்த பிறகு வருடத்திற்கு 25 கோடி ரூபாய் மிஞ்சுகிறது. அதாவது மாதத்திற்கு 2 கோடி ரூபாய். இந்தத் தொகை மீனாட்சியின் பெயரில் வங்கியில் டெபாசிட் செய்யப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் மீனாட்சியின் வங்கிக் கணக்கில் 100 கோடி ரூபாய் டெபாசிட் செய்யப்பட்டிருக்கிறது.

   2010ஆம் ஆண்டில் மீனாட்சி அம்மன் கோவிலின் வருடாந்திர வருவாய் 11 கோடி ரூபாய். இப்போது ஏழு ஆண்டுகள் கழிந்த பிறகு கோவிலின் வருவாய் 49 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இப்போது மீனாட்சியின் பெயரில் வங்கியில் வைக்கப்பட்டிருக்கும் வைப்புத் தொகை மட்டும் 176 கோடி ரூபாய் இருக்கிறது. மேலே நான் சொன்ன தகவல்களை யார் வேண்டுமானாலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெற்று சரிபார்த்துக்கொள்ள முடியும்.

4. 1967இல் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு கோவில் சொத்துகள் கொள்ளையடிக்கப் பட்டதாக ஒரு பச்சைப் பொய்யைச் சொல்கிறார் மாரிதாஸ். 67இல் திராவிடக் கட்சிகள் ஆட்சிக்கு வந்த பிறகு கோவில்கள் எப்படி மேம்பட்டன என்பதற்கு மீனாட்சி அம்மன் கோவில் ஒரு உதாரணம். இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டுகிறேன்.

   1963இல் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடந்தது. அப்போது அந்த கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு போதுமான நிதி கோவிலிடம் இல்லை. இதனால், நிதியுதவி கோரி பல்வேறு கோவில்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. பல கோவில்களும் தனி மனிதர்களும் நிதியுதவி செய்தனர். இது ஏதோ மாரிதாஸ் போல போகிறபோக்கில் சொல்லப் படுகிற செய்தியல்ல. அதற்கான கல்வெட்டு ஆதாரங்கள் இப்போதும் கோவிலின் பொற்றாமரைக் குளத்திற்கு அருகில் இருக்கின்றன. எந்தெந்தக் கோவிலிருந்து, யார் யாரிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டன என்ற தகவல் அங்கே கல்வெட்டுகளாக பொறிக்கப்பட்டு காட்சியளிக்கின்றன.

   1967இல் தமிழகத்தில் திராவிடக் கட்சிகளின் ஆட்சி வந்த பிறகு, கோவில்கள் பராமரிக்கப் படுவது தொடர்ந்து மேம்பட்டது என்பதைத் தான் தற்போது வைப்பு நிதியில் உள்ள 176 கோடி ரூபாய் பணம் காட்டுகிறது. அது மட்டுமல்ல கடந்த நான்கு ஆண்டுகளில் மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டிருக்கிறது. இவற்றின் மொத்த மதிப்பு 150 கோடி ரூபாயைத் தொடும்.

5. தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்திற்கு பத்தாம் நூற்றாண்டில் ராஜராஜ சோழன் 16 வகை முத்து வைர நகைகளைக் கொடுத்தார். அதன் மதிப்பு ஆயிரம் கோடிகளுக்கு மேலாம். அதை திராவிடக் கட்சிகள் திருடிவிட்டன என்கிறார் மாரிதாஸ்.

   **பதில்:** தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம் மத்திய தொல்பொருள் துறையின் கண்காணிப்பின் கீழ் உள்ள ஒரு ஆலயம். இந்தக் கோவில் 1959ல்தான் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் வந்தது. இருந்தாலும் ஏஎஸ்ஐயின் கண்காணிப்பும் இப்போதும் தொடர்கிறது. இந்த நிலையில், 10ஆம் நூற்றாண்டில் கொடுக்கப்பட்ட நகைகள் பத்திரமாக வைக்கப்பட்டு, 1967 தி.மு.க. ஆட்சி வந்த பிறகு கொள்ளையடிக்கப்பட்டன என்று பொய் சொல்வதற்கு உண்மையிலேயே ஒரு துணிச்சல் வேண்டும். என்ன மாதிரி நகை, எத்தனை கிலோ, இப்படி கொடுக்கப்பட்டதற்கு என்ன ஆதாரம் என யாரும் கேட்க மாட்டார்கள் என்ற துணிச்சல்தான் அது.

6. மதுரை, அழகர் கோவில், திருவில்லிபுத்தூர் கோவில்களுக்கு கிருஷ்ணதேவராயர் ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்க்கு நகைகளைக் கொடுத்தார். அவற்றைக் காணோம். திருவொற்றியூர் கோவிலில் தங்கக் கதவுகள் இருந்தன. அவற்றைக் காணவில்லை.

   **பதில்:** எல்லாம் போகிறபோக்கில் அடித்து விடுவது. கிருஷ்ண தேவராயர் நகைகளைக் கொடுத்தாரா, அவை இந்து அறநிலையத் துறையால் கையகப்படுத்தப்பட்டனவா என்றெல்லாம் யாரும் கேட்கமாட்டார்கள் என்ற தைரியம். திருவொற்றியூரில் இரண்டு பெரிய கோவில்கள் இருக்கின்றன. அதில் எந்தக் கோவிலில் தங்கக் கதவு, எந்தக் காலத்தில் இருந்தது? திருவொற்றியூரில் இரண்டு பெரிய கோவில்கள் இருக்கின்றன என்பதாவது இந்த நபருக்குத் தெரியுமா?

7. ஆஸ்திரேலியப் பிரதமர், இந்தியப் பிரதமருக்கு அர்த்த நாரீஸ்வரர் சிலையைப் பரிசளித்தார். அவை நம் கோவில்களிலிருந்து திருடப் பட்டவை.

   பதில்: ஏதோ கலைஞர் சிலையைத் திருடி ஆஸ்திரேலியாவில் விற்றதைப் போலவும் நரேந்திர மோதியே அந்தச் சிலைகளை மீட்டுக்கொண்டு வந்ததைப்போல பேசுகிறார் மாரிதாஸ். 2014 செப்டம்பரில் பிரதமர் மோடி ஆஸ்திரேலியாவுக்குப் போனபோது, அந்நாட்டுப் பிரதமர் இரண்டு சிலைகளை இந்தியப் பிரதமருக்குப் பரிசளித்தார். ஒன்று நடராஜர் சிலை. மற்றொன்று அர்த்தநாரீஸ்வரர் சிலை. நடராஜர் சிலை அரியலூர் மாவட்டத்தில் உள்ள திருப்புரந்தன் ஆலயத்திலிருந்து 2006ல் திருடப்பட்டது. அர்த்த நாரீஸ்வரர் சிலை, விருத்தாச்சலம் விருதகிரீஸ்வரர் ஆலயத்திலிருந்து திருடப்பட்டது.

   இந்தச் சிலைகள் ஆஸ்திரேலியாவில் இருக்கின்றன என்று கண்டறிந்தது, தமிழக சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு. அப்போது அதன் தலைவர் ஏடிஜிபி பிரதீப் வி.ஃபிலிப்.

   இந்தச் சிலைகள் ஆஸ்திரேலியாவில் இருக்கின்றன என்று தெரிந்தவுடன், அதை மீட்பதற்கான முயற்சிகளை 2014ஆம் ஆண்டின் துவக்கத்திலிருந்து மேற்கொண்டது மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசு. அதன் உச்சகட்டமாகத்தான் சிலைகள் திருப்பியளிக்கப் பட்டன. இதற்கான முயற்சிகளை மேற்கொண்டவர்கள் தமிழக அரசும் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசும். ஏதோ தானும் மோடியும் போய் மீட்டுவந்ததைப் போல பில்டப் கொடுக்கிறார் மாரிதாஸ்.

நாமெல்லாம் வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமாம். முதலில் அவர் பொய் இல்லாமல் பேசக் கற்றுக் கொள்ளட்டும்.

**– இணையத்திலிருந்து**

## பெரியார் நினைவு நாள் நிகழ்வு

**இராசிபுரத்தில் :** தந்தைபெரியாரின் 45 வது நினைவேந்தல் நிகழ்வு இராசிபுரம் நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் இராசிபுரம் ஜபாரதிதாசன் சாலையில் உள்ள தி.வி.கழக அலுவலகம்முன் நடைபெற்றது. பகுத்தறிவு பகலவனுக்கு முழக்கங்கள் எழுப்பி வீரவணக்கம் செலுத்திய நிகழ்வில் ர. சுமதிமதிவதனி (தி.வி.க.), திலகா (இராசிபுரம்) வரவேற்புரையாற்றினார். இரா. பிடல்சேகுவேரா (நகரஅமைப்பாளர் தி.வி.க) தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டவர்கள் : வி.பாலு Ex. MC, தி.மு.க.முன்னாள் மாவட்ட இளைஞரணி துணைஅமைப்பாளர், தலைவர், இராசிபுரம் நகரவளர்ச்சி மன்றம்.

முன்னிலை: மணிமாறன் (நகர செயலாளர் சி.பி.ஐ.), ஜி.கே. வைகறை சேகர் (மாநில துணைச் செயலாளர் விவசாயஅணி, வி.சி.க.), கண்ணன் (மாவட்டச் செயலாளர், ஆதித் தமிழர் பேரவை), தட்சிணாமூர்த்தி (மாவட்டத் தலைவர், தமிழர் தேசிய முன்னணி), நாணற்காடன் (மாநிலதுணைசெயலாளர், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்), சுமன் (மா.துணை செயலாளர், ஆதி தமிழர்பேரவை), அண்ணாதுரை (ஒ.செயலாளர், ஆதிதமிழர் பேரவை), பாலகிருட்டிணன் (புரட்சிகர இளைஞர் முன்னணி), கீதாலட்சுமி (நகர வழக்கறிஞர் அணி தி.மு.க.), திளவேந்திரன் (நகர சிறுபான்மையினர் அணி அமைப்பாளர்), தங்கதுரை (தி.மு.க நிர்வாகி), குபேர்தாஸ் (தலைவர் கோல்டன் நற்பணி சங்கம்), பூபதி (கமலஹாசன் நற்பணி இயக்கம்) மற்றும் பெரியார் பிஞ்சு, சிரஞ்சீவி. நன்றியுரையாற்றினார் திலீபன் (தி.வி.க.)

நிகழ்வில் இராசிபுரம் நகர திராவிடர் விடுதலைக்கழகம் முன்னெடுக்கும் நிகழ்வுகளுக்கு தொடர்ந்து ஊக்கத்தையும்,நிதி உதவியையும் அளித்து வரும் இராசிபுரம தி.மு.க.பிரமுகர் வி.பாலு, தி.வி.க.வின் 2019ஆம் ஆண்டிற்கான மாத நாள்காட்டியையும், நவம்பர் மாத நிமிர்வோம் இதழையும், தி.மு.க.நகர வழக்கறிஞர் அணி கீதாலட்சுமி, பெரியார் பற்றாளர் திலகா ஆகியோருக்கு மாத நாள்காட்டி, நிமிர்வோம் மாத இதழோடு பெரியார் எழுதிய ‘பெண் ஏன் அடிமையானாள்’ நூலையும் சுமதி மதிவதனி வழங்கினார். தோழமைக் கட்சிப் பொறுப்பாளர்களுக்கு மாத நாள்காட்டியையும், நவம்பர் மாத ‘நிமிர்வோம்’ இதழையும் வி.பாலு வழங்கினார்

**ஈரோட்டில் :** பகுத்தறிவுப் பகலவன் பெரியார் 45 வது நினைவு தினத்தையொட்டி திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பாக அய்யாவின் சிலைக்கு மாலை அணிவித்தும் , முழக்கங்கள் செய்தும் வீரவணக்கம் செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் பங்கேற்றத் தோழர்கள் பெ.கிருஷ்ணமூர்த்தி, ரங்கம்பாளையம் கிருஷ்ணன், மணி மேகலை, விஜயரத்தினம், புலிமோகன், பிரபு, சதீஸ், மகேஷ்வரி, சத்தியராஜ், சௌந்தர், அறிவுமதி ஆகியோர் பங்கேற்றனர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 ~~LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018~~
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பெங்களூருவில் விஷ்ணு சிலை அமைக்க தமிழகத்தின் பாறையை வெட்டுவதா? பி.யு.சி.எல். அமைப்பு கண்டனம்

***பெங்களூருவில் விசுவரூப மகா விஷ்ணு சிலை அமைக்கத் தமிழக அரசுக்குச் சொந்தமான பாறையைக் கொண்டு செல்லத் தடை விதிக்கக் கோரி மக்கள் சிவில் உரிமைக் கழகம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கை.***

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசிக்கு அருகிலுள்ள கொரக் கோட்டை கிராமத்திலிருந்து மிகப் பெரும் குன்றுப்பாறையை வெட்டி யெடுத்து, கிட்டத்தட்ட 300 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால், பெங்களூருவின் ஈஜிபுராவிலுள்ள கோதண்ட இராமசுவாமி கோவிலில், ஏறத்தாழ 300 டன் எடை கொண்ட விசுவரூப மகா விஷ்ணு சிலை அமைப் பதற்கு ஒரு அறக்கட்டளைக்கு மத்திய, மாநில அரசுகள் அனுமதி அளித்தது கடும் கண்டனத்திற்கு உரியது.

இவ்வளவு பிரமாண்டமான சிலையை அமைப்பதற்குத் தேவையான ஒற்றைக் கல் இந்தியாவில் எங்கும் கிடைக்கவில்லை எனவும், இச்சிலையை நிறுவத் திட்டமிட்ட பெங்களூருவிலுள்ள கோதண்ட இராமசாமி கோவில் அறக்கட்டளை, அரசினை அணுகியது எனவும் இவர்களின் வேண்டுகோளை ஏற்று தொலைதூரச் செயற்கைக் கோளின் உதவியால், தேவையான கல் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருப்பதை அரசு கண்டுபிடித்து, அத்தனியார் அறக்கட்டளைக்குத் தெரிவித்தது எனவும், 2014 ஆம் ஆண்டிலிருந்தே பாறையை வெட்டிச் சிலையமைக்கும் பணிகள் தொடங்கி விட்டன எனவும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

108 அடி உயரம், 11 முகங்கள், 22 கைகள் கொண்ட இச்சிலையை உருவாக்குவதற்கு முன், 64 அடி உயரமும் 24 அடி அகலமும் கொண்ட பெருமாளின் முகம் மட்டும் முதல் கட்டமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இதை 240 டயர்கள் கொண்ட மாபெரும் வாகனத்தில் வைத்து எடுத்துச் செல்லும் நடவடிக்கைகள் தொடங்கி உள்ளன. இப்பெரும் பாறையைத் திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து பெங்களூரு வுக்குக் கொண்டு செல்ல மும்பையைச் சார்ந்த ரேஷம்சிங் குழுமத்திடம் ஒப்பந்தம் போடப்பட்டு இருக்கிறது.

இப்பெரும் கல்லை எடுத்துச் செல்லும் பொழுது, அதன் எடையைத் தாங்க முடியாமல் டயர்கள் வெடித்துள்ளன. மேலும் அவ்வண்டி சேற்றில் புதைந்து நகர முடியாமல் திணறியுள்ளது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

சிலைக்கான பெரும் கல்லை எடுத்துச் செல்வதற்கு வழியில் இடை யூறாக உள்ள ஏழை எளியவர்களின் குடிசைகள் பிய்த்தெறியப் பட்டுள்ளன; கடைகள் இடித்துத் தள்ளப்பட் டுள்ளன. விழுப்புரம் மாவட்டம், மயிலம் வட்டம், வெள்ளிமேடு பேட்டையைச் சேர்ந்த கருப்பையா கவுண்டர் மகன் குபேரன் என்பவரது இரண்டு மாடிக் கட்டடம், சிலைக் கான கல்லைக் கொண்டு செல்லும் பொழுது இடித்துத் தரை மட்ட மாக்கப்பட்டுள்ளது. இதற்கு உரிய இழப்பீடு தருவதாக வாக்களித்து விட்டு, இடித்த பிறகு பேசிய தொகையைக் காட்டிலும் பல இலட்ச ரூபாய் குறைவாகக் கொடுத்து விட்டு, வீட்டு உரிமையாளரை அலைக் கழித்துக் கொண்டுள்ளனர். இதே போல ஏழை எளியவர்களின் வீடுகளும் இடிக்கப்பட்டுள்ளன. சிலை கொண்டு செல்லப்படும் வழியெல்லாம் இன்னும் எத்தனை இடர்பாடுகளைப் பொது மக்கள் சந்திக்க வேண்டியிருக்குமோ தெரியவில்லை.

பொதுமக்களுக்குப் பெரும் நாசத்தை விளைவிக்கக் கூடிய சட்ட விரோதமான இந்த அராஜகத்தை, அந்த ஒப்பந்தத் குழுமத்தின் முகவர் களே முன் நின்று செய்கின்றனர். வருவாய்த் துறையினரோ, காவல் துறையினரோ இவற்றைக் கண்டு கொள்ளாமல் உள்ளனர். சிலையை எடுத்துச் செல்வதற்காக வெள்ளி மேடுப் பேட்டை பகுதியில், சாலை விரிவாக்கமும் செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், அந்தப் பாறையில் பெருமாள் முகம் செதுக்கப்பட்டுள்ளதால், அதைக் காட்டி நாள்தோறும் பல்லாயிரக் கணக்கான ரூபாய் ஒப்பந்தக்காரர் களால் மக்களிடம் இருந்து வசூலிக்கப்பட்டு வருகிறது. இதற்காக யார் மீதும் இதுவரை எவ்விதச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. மேலும் இக்கல்லை எடுத்துச் செல்வதை எதிர்த்து அப்பகுதி மக்கள் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

ஒவ்வொரு கட்டத்திலும் இவ்வளவு சட்ட மீறல்கள் இருந்தும், சட்டத்தின் ஆட்சி நிலை நிறுத்தப் படாமல் இருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. எனவே, இந்தப் பிரச்னையில், மக்கள் சிவில் உரிமைக் கழகம் கீழ்கண்ட கோரிக்கைகளை முன்வைக்கிறது.

1. தமிழக அரசு, பொதுச் சொத்தான குன்றுப்பாறையை, ஒரு அறக் கட்டளைக்கு எந்த அடிப்படை யில் வழங்கியது என்பதை தெளிவு படுத்துவதுடன், அது குறித்த ஆவணங்களையும் வெளியிட வேண்டும்.
2. சிலையை கொண்டு செல்ல சுரங்கம் மற்றும் கனிமம், TANGEDCO, காவல்துறை, மாநில நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ் சாலை போன்ற துறைகள் எந்த அடிப்படையில் அனுமதி வழங்கின என்பதையும் தமிழக அரசு தெளிவுபடுத்த வேண்டும்.
3. இதுவரை சேதப்படுத்தப்பட்ட வீடுகள், கடைகள் மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு உரிய இழப்பீட்டினை கோதண்டராம சுவாமி அறக்கட்டளையிடமிருந்து தமிழக அரசு பெற்றுத் தர வேண்டும்.
4. தமிழ் நாட்டிற்குச் சொந்தமான இந்தப் பெரும் பாறைக் கனிமத்தை, மக்களின் விருப்பத்திற்கு மாறாகக் கர்நாடகத்திலுள்ள ஒரு அறக் கட்டளைக்குக் கொண்டு செல்லக் கூடாது.
5. அரசியல் சட்டம் வலியுறுத்தும் மதச்சார்பற்ற தன்மையைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, பெரும்பான்மை மதத்திற்கு அனைத்துச் சலுகைகளையும் வழங்கும் போக்கை மத்திய, மாநில அரசுகள் கைவிட வேண்டும்.

மக்கள் சிவில் உரிமைக் கழகத் தலைவர் கணகுறிஞ்சி, மாநிலப் பொதுச் செயலாளர் க. சரவணன் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருச்சிப் பேரணி : மலேசியத் தமிழர்களிடம் எழுச்சி

மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் தமிழர் தன்மான இயக்கம் சார்பில் டிசம்பர் 24ஆம் தேதி திருச்சி கருஞ்சட்டைப் பேரணி குறித்து சிறப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பெரியார் அரங்கில் நடந்த இந்த நிகழ்வுக்கு தன்மான இயக்கத் தலைவர் பெரு. அ. தமிழ்மணி தலைமை தாங்கி திருச்சிப் பேரணி மிகப் பெருந் தாக்கத்தை உருவாக்கியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

மலேசிய தி.க. தேசியத் தலைவர் எப்.காந்தராசு, கெ.வாசு, த.பரமசிவம், நா.பாரி, இரா.பெரியசாமி, இவர்களோடு மாந்த நேய திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் ச. அன்பரசன், பெரியார் பாசறை துணைத் தலைவர் ம. இலட்சுமணன் ஆகியோர் திருச்சியில் கருஞ்சட்டைத் தோழர்களை வாழ்த்தி - வரவேற்றுப் பேசினார்கள்.

50க்கும் மேற்பட்ட தோழர்கள் கருஞ்சட்டை அணிந்து வந்தனர். பகுத்தறிவு கவிஞர் தி.ப.செழியன், பெரியார் குறித்து சிறப்பான கவிதை வாசித்து அரங்கம் அதிர கரவொலி பெற்றார். இறுதியாக தலைமைச் செயலாளர் சி.மு.விந்தைக்குமரன் நிறைவுரையாற்றினார். இயக்கத் துணைப் பொதுச் செய லாளர் த.சி.அழகன் நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார். தேநீர் நிகழ்வோடு பெரியார் பரம்பரை இங்கே உதயமாகட்டும் என்ற முழக்கத்தோடு கூட்டம் முடிவுற்றது.

## பெரியார் தொண்டர் உணவகத்தில் நெகிழிப் பயன்பாடு நிறுத்தம்



நெகிழி பொருட்கள் (பிளாஸ்டிக்), நெகிழி பைகள் ஜனவரி 1, 2019 முதல் தமிழகத்தில் பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, மந்தைவெளி பகுதியில் பெரியாரிய தொண்டர் சுரேஷ் நடத்தி வரும் 'அய்யா உணவகத்தில்' டிசம்பர் 31 முதல் வாழை இலை, துணிப்பை, பாக்குமட்டை தட்டு போன்றவற்றை பயன்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளனர்.

தென்சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மயிலாப்பூர் பகுதிச் செயலாளர் மாரிமுத்து மற்றும் கழகத் தோழர்கள் நேரில் சென்று வாழ்த்தி வரவேற்றனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் காஞ்சி மக்கள் மன்றத்தில் இரண்டு நாள் பயிற்சி முகாமும் பொள்ளாச்சியில் கழக சார்பில் ஒரு நாள் பயிற்சி முகாமும் நடந்தது.

**ஆகஸ்ட் :** கழக சார்பில் கல்வி உரிமை மீட்புப் பரப்புரைப் பயணம் ஆக. 20இல் தொடங்கியது. 6 பரப்புரைக் குழுக்கள் - 6 முனைகளிலிருந்து 140 ஊர்களில் 7 நாட்கள் பரப்புரை செய்தன. ஆக. 26இல் பெரம்பலூரில் பயண நிறைவு விழா மாநாடு எழுச்சியுடன் நடந்தது.

**செப்டம்பர் :** விநாயகர் சிலை ஊர்வலத்துக்கு பதிலடியாக பெரியார் கைத்தடி ஊர்வலங்களை சென்னை - ஈரோட்டில் நடத்தி தோழர்கள் கைதானார்கள்.

**அக்டோபர் :** அக்.13இல் திருப்பூரில் கழகத் தலைமைக் குழுவும், அடுத்த நாள் அக்.14இல் திருப்பூரில் கழக செயலவையும் கூடியது. கழகத்தில் அடுத்தக் கட்ட செயல்பாடுகள் கழக ஏடுகளுக்கு சந்தா திரட்டும் இயக்கங்கள் மாவட்டந்தோறும் கலந்துரையாடல் கூட்டங் களுக்கு திட்டமிடப்பட்டன. மாவட்டந்தோறும் கலந்துரையாடல் கூட்டங்களும் - புரட்சிப் பெரியார் முழக்கம், நிமிர்வோம் சந்தா சேர்ப்பு இயக்கங்களும் நடந்து வருகின்றன. கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆயுத பூஜை கொண்டாடப்பட்டதற்கு காவலாண்டியூர் தோழர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். திமிர் பேசிய அதிகாரி, பின்னர் பணிந்து இனி ஆயுத பூஜ போட மாட்டோம் என எழுத்து மூலம் தெரிவித்தார்.

திருப்பூரில் அரசு நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு 'இந்துத்துவா' பயிற்சிக்கு அனுமதித்த மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி மீது நடவடிக்கைக் கோரி திருப்பூரில் தடையை மீறி போராட்டம் நடத்தி கழகத்தினர் கைதானார்கள்.

**நவம்பர் :** கொளத்தூர் அருகே புலியூரிலும், சென்னையிலும் மாவீரர் நாள் நினைவு கூறப்பட்டது.

**டிசம்பர் :** டிசம்பர் 23இல் வரலாறு படைத்த 160க்கும் மேற்பட்ட அமைப்புகள் பங்கேற்ற கருஞ்சட்டைப் பேரணியில் பல்லாயிரக்கணக் கில் கழகத் தோழர்கள் தனிப் பேருந்துகளில் திரண்டு வந்து பங்கேற்று தனி முத்திரை பதித்தனர்.

**தொகுப்பு : இரா**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 4th January 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN